**சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.114/2020

நாள்: 01.09.2025.

வா.சா. 1 – லோகநாதன்

**6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1 கிரய ஆவணம் காமராஜ் என்ற எழுத்துக்காரர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 கிரய ஆவணம் எழுதும்போது யார் இருந்தோம் என்றால் நான், 2ம் வாதி சிவக்குமார், சாமிநாதன், ராமசாமி, கார்த்திக்கேயன் ஆகியோர் இருந்தார்கள். வா.சா.ஆ.1 கிரய ஆவணம் பேசிய அன்றே எழுதப்பட்டதா என்றால் 1வருடத்திற்கு முன்பே 1ம் பிரதிவாதி ராமசாமி என்னிடம் பேச்சு வார்த்தையில் இருந்தார். 1 செண்ட் எவ்வளவுக்கு பேசப்பட்டது என்றால் செண்ட்டு கணக்குக்கு பேசவில்லை மொத்தமாக பேசினோம். வா.சா.ஆ.1 கிரய ஆவணம் எழுதி பதிவுக்காக கொடுத்தபோது சார்பதிவாளர் பதிவு செய்யமுடியாது என்று மறுத்துவிட்டார். 1ம் பிரதிவாதியின் அண்ணன் காளிமுத்து தடங்கல் மனு கொடுத்ததால் பதிவு செய்ய முடியாது என்று மறுத்து மாவட்ட பதிவாளரை சந்திக்க சொன்னார்கள். மாவட்ட பதிவாளரை நான் பார்த்தேனா என்றால் இல்லை. ராமசாமி பணம் வாங்கிக் கொண்டு முழு பொறுப்பையும் ஏற்றதால் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. பத்திரம் பதிவு செய்ய மறுத்த அன்று நான் முழு பணத்தையும், பத்திர செலவு பணத்தையும் 1ம் பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டு அந்த கிரய சொத்து எனக்கு வேண்டாம் என்று ஒதுங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. கிரயம் வேண்டாம் என்று நான் ஒதுங்கிக் கொண்டதால் தான் நான் மாவட்ட பதிவாளரை சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் காளிமுத்து

ஆகியோர்க்குள் சமதானம் ஆன பிறகு 1ம் பிரதிவாதி என்னிடம் கிரயம் செய்துக்கொள்ள கேட்டார் என்றாலும் நான் கிரயம் வேண்டாம் என்றதால் தான் 2ம் பிரதிவாதியிடம் கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கிரயம் சம்மந்தமாக நடந்த விவிரம் எதுவும் கிரய காலத்தில் 2ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வில்லங்கம் பார்த்து வில்லங்கம் இல்லை என்று தெரிந்த பிறகு தான் 1ம் பிரதிவாதியிடம் இருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அஞ்சலிதேவி தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை தற்போது யார் அனுபவிக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இறந்து போன 2ம் பிரதிவாதியனா அழகர் என்பவர் 6ம் பிரதிவாதியான அஞ்சலிதேவிக்கு உயில் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் கேள்விப்பட்டுள்ளேன். உயில் பத்திரப்படி அஞ்சலி தேவி தான் தாவா சொத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை நான் தெரிந்துக்கொண்டே வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஜெயங்கொண்டம் சார்பதிவாளர் அலுவகத்தில் வா.சா.ஆ.1 ஆவணம் படி எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் வேறு தரப்பினருக்கு கிரயம் கொடுக்கலாம் என்று எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தடங்கல் மனு கொடுத்த காளிமுத்துவை இந்த வழக்கில் நான் தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் நான் கிரயம் வாங்குவதாக இருந்தால் சார்பதிவாளர் எனக்கு பத்திரம் பதிவு செய்ய முடியாது என்று மறுத்தவுடனே மாவட்ட பதிவாளரை அனுகி பத்திரம் பதிவு செய்வது சம்மந்தமாக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் 1ம் பிரதிவாதி பொறுப்பேற்றுக் கொண்டதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. வா.சா.ஆ.2–ன் பெயரில் நான் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இறந்துபோன 2ம்

பிரதிவாதி அனுபவித்து வந்து பின்னிட்டு 6ம் பிரதிவாதி அனுபவித்தில் உள்ளதை தெரிந்துக் கொண்டும் தாவா சொத்தின் மதிப்பு தற்போது அதிகமாக இருப்பதால் அவர்களிடம் இருந்து பணம் பரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 1ம் பிரதிவாதியுடன் கூட்ட சேர்ந்துக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ன் படி எந்த பரிகாரமும் கிடைக்கத் தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம்/ V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.